வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3010/ஆ5/202 4, நாள்.24.07.2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் துறை மற்றும் காலநிலை மாற்றம் துறை – தேசிய பசுமைப்படை சுற்றுச்சூழல் மன்றம் இணைந்து – பள்ளி வளாகத்தில் மரக்கன்று நடுதல் (Plant –4Mother) என்ற திட்டத்தின்படி 22.07.2024 முதல் 31.08.2024 வரை மழைக்காலத்தில் மரக்கன்றுகள் நடுதல் – தொடர்பாக

பார்வை

1. தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண். 220/EMAT/2024, நாள். 22.07.2024
2. வேலூர் மாவட்டம், தேசிய பசுமைப்படை மாவட்ட ஒருங்கிணைப்பாளரின் கடித ந.க.எண்.3/2024-2025, நாள். 22.07.2024

.....

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் கடிதத்தின்படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளில் மரக்கன்று நடுதல் (Plant –4Mother) என்ற திட்டத்தின்படி மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து அரசு / ஆதிதிராவிடர் நலம் / நகராட்சி / உதவிபெறும் பள்ளிகள் / தனியார் பள்ளிகள் / தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் இயங்கிவரும் தேசிய பசுமைப்படை மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக 22.07.2024 முதல் 27.07.2024 வரை பெற்றோருடன் இணைந்து மரக்கன்று நடும் விழா நடத்தி GPS கேமரா புகைப்படம் எடுத்து அதனை MERILIFE PORTAL –ல் https://merilife.nic.in பதிவேற்றம் செய்ய அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

22.07.2024 முதல் 27.07.2024க்குள் குறைந்தது ஒரு மரக்கன்றினை பெற்றோருடன் நட்டு புகைப்படம் பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

ஒவ்வொரு பள்ளியிலும் 31.08.2024 மழைக்காலம் வரை மரக்கன்று நடும் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற வேண்டும்.

மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியின் புகைப்படத்தை மாவட்ட தேசிய பசுமைப்பட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சீ. முரளீதர் அவர்களின் கைப்பேசி எண்ணிற்கு 9443800709 அனுப்பி வைக்க அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஒ/- 25.07.24 . முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அனைத்து அரசு / ஆதிதிராவிடர் நலம் / நகராட்சி / உதவிபெறும் பள்ளிகள் / தனியார் பள்ளிகள் / தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்.
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   (பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. முனைவர் சீ. முரளீதர்,
   மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்,
   வேலூர் மாவட்டம்.